ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1794/12 - 2013 ජනවාරි මස 22 වැනි අඟහරුවාදා - 2013.01.22

*1794/12 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி மன்றங்களின் (சம்மதிக்கப்பட்ட துணை விதிகள்) சட்டம்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கவேண்டிய (262 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி மன்ற (நியம துணை யாப்புகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிணங்க, ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ ஆகிய என்னால் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவன (சம்மதிக்கப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட வரைவு துணை விதியாகும்.*

*இவ் வரைவு துணை விதிகளில் உள்ள ஏற்பாடுகளை உள்ளடக்கிய துணை விதிகளை தயாரிப்பதற்கு மாநகர சபைகளுக்கும் நகர சபைகளுக்கும் பிரதேச சபைகளுக்கும் முறையாக (252 ஆம் அத்தியாயமான) 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளை சட்டத்தின் 272 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 267 ஆம் பிரிவின் (255 ஆம் அத்தியாயமான) 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 153 பிரிவினாலும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 122 ஆம் பிரிவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அத்துணை விதிகளை மேற்குறிப்பிடப்பட்டுள்ள 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (சம்மதிக்கப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் அதிகாரத்தின் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக்கொள்வதற்கு அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.*

*சஷீந்திர ராஜபக்ஷ,*
*ஊவா மாகாண, மாகாண சபையின்*
*உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான*
*அமைச்சர்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*பதுளை,*
*2012, திசெம்பர் 18.*

### துணை விதிகள்

*1. இத்துணைவிதிகள் "சமூக அடிப்படையிலான அமைப்புக்களினால் முகாமைத்துவம் செய்யப்படும் கிராமிய நீர்வழங்கல் திட்டத்துணை விதிகள்" என அறிமுகப்படுத்தப்படும்.*

*2. (1) ஏதும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப் பிரதேசத்திற்குள் நீர் வழங்கல் மற்றும் நீர் கைத்தொழில் திட்டமொன்றை நடாத்திவரும் (இதனகத்து பின்னர் "ச.அ.அ.") சமூக அடிப்படையிலான அமைப்பொன்றுக்கு தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுத்தல் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் பணியாகும்.*

*(2) ச. அ. அ. மூலம் ஏதாவது உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைக்குள், நீர் வழங்கல் மற்றும் நீரியல் கைத்தொழில் திட்டமொன்றை தாபிப்பதற்கு முன் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அனுமதியினை பெற வேண்டும்.*

*(3) ஏதாவது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றுக்கு அனுமதிக்காக அவ்வாறான கோரிக்கை கிடைக்கப்பெறும் பட்சத்தில் அக்கோரிக்கை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் அதற்கான அனுமதியை வழங்கல் அல்லது நிராகரித்தல் செய்யப்பட வேண்டியதோடு அனுமதிவழங்கலை நிராகரிப்பதாயின் உள்ளூராட்சி நிறுவனங்கள் அதற்கான காரணங்களை முன்வைக்க வேண்டும்.*

(4) எவ்வாறாயினும், அவ்வகை கோரிக்கையொன்றுக்கு அனுமதி வழங்கப்படுவதற்கு முன்பாக குறித்த நீர் வழங்கல் மற்றும் நீர் கைத்தொழில் திட்டம் தாபிக்கப்பட்டுள்ள காணியின் உரிமையை அல்லது பொறுப்பை கொண்டுள்ள நிறுவனம் மற்றும் அத்திட்டம் தொடர்பில் நீர் வழங்கல் வடிகாலமைப்புசபையின் பரிந்துரைகளை பெற்றுக்கொள்வது உள்ளூராட்சி நிறுவனத்தின் பொறுப்பாகும்.

3. இத்துணை விதியின் முதலாவது உப **அட்டவணையில் குறித்து** சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப நீர்க் கைத்தொழில் மற்றும் நீர் வழங்கல் முறையொன்றை முகாமைத்துவம் செய்வது ச. அ. அ. இன் கருமமாக இருக்க வேண்டும்.

4. (1) யாராயினும் நபரொருவர் சொந்த நீர்ச்சேவை இணைப்பபைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பாராயின், பிரதேசத்தின் சமூக அடிப்படையிலான அமைப்பால் குறித்து சொல்லப்பட்டள்ளவாறு அவ்வமைப்புக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) சமூக அடிப்படையிலான அமைப்பொன்றினால் நீர்ச்சேவை இணைப்பொன்றை பெற்றுக் கொடுக்க அல்லது காரணங்கள் குறிப்பிடப்பட்டு அவ்விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படவும் இயலும்.

(3) இந்த நீர்ச்சேவை இணைப்பு பெற்றுக்கொடுக்கப்படுவதன் மூலம் பிரதேசத்தின் தொடர்ச்சியான சேவை வழங்குவதில் தடையோ, பின்னடைவோ ஏற்படுமென ச. அ. அ. இனால் தீர்மானிக்கப்படுமாயின், ஏனைய காரணங்களுடனும் இக்காரணத்தின் அடிப்படையிலும் இந்த அமைப்பினால் இத்துணை விதிகளின் கீழ் தனியார் நீர்ச்சேவை இணைப்புக்கான விண்ணப்பம் நிராகரிக்கவும் படலாம்.

(4) (அ) ச. அ. அ. மூலம் விண்ணப்பம் நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில், அந்நிராகரிப்பை காரணங்களுடன் குறித்த விண்ணப்பம் கிடைத்து பதினான்கு நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) (அ) ச.அ.அ. மூலம் விண்ணப்பம் நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட தீர்மானத்தில் அதிருப்தியுறும் பிரிவினர் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்துக்கு அதுபற்றி மேன்முறைப்பாடொன்றை முன்வைக்க முடியும்.

(இ) அவ்வாறான மேன்முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் அதுபற்றி பொருத்தமான பரிசீலனையை செய்து மேன்முறையீடு கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களுக்குள் உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரினால் தகுந்த கட்டளைகளை வழங்க வேண்டும்.

(5) ச. அ. அ. மூலம் நீர்ச்சேவை இணைப்பு பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானிப்பின் இணைப்பு பெற்றுக்கொடுப்பதற்கு முன்னர் இந்த துணை விதிகளில் குறிக்கப்பட்டுள்ள நியதி மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப ச. அ. அ. மூலம் விண்ணப்பதாரியுடன் ஒப்பந்தமொன்றைச் செய்தல் வேண்டும்.

(6) நீர்ச்சேவை இணைப்பை பெற்றுக்கொடுப்பதற்காக ச. அ. அ. மூலம் மதிப்பீடு செய்யப்படும் செலவை விண்ணப்பதாரரினால் ச. அ. அ. க்கு செலுத்தப்பட வேண்டும்.

(7) (அ) சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் புதிய நீர்ச்சேவை இணைப்பொன்றைப் பெற்றுக்கொடுக்கும்பொழுது அல்லது தற்சமயம் உள்ள இணைப்பில் ஏதும் மாற்றம் செய்யும் பொழுதும், விண்ணப்பதாரியினால் செலுத்தப்படவேண்டிய செலவை அவரால் தாங்கிக் கொள்ள முடியாதுள்ள சந்தர்ப்பத்தில், விசேட மனிதாபிமான காரண அடிப்படையில் ச. அ. அ. மூலம் அவரை அச்செலவிலிருந்து விடுவிக்க முடியும்.

(ஆ) மேற்படி (அ) பந்தியிலுள்ள விடுவித்தலுக்கான தீர்மானமொன்றை பொதுச் சபைக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. (1) இத்துணை விதிகளின் கருமங்களுக்காக கீழ்க்காணும் நபர்கள் அடங்கலான நீர்க் கைத்தொழில் தொழில் நுட்பவியலாளர்களின் குழுவொன்றை உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(அ) ஏதும் சமூக அடிப்படையிலான அமைப்பின் உறுப்பினராகவும் உரிய கடமையை மேற்கொள்ளக்கூடிய பயிற்சியைப் பெற்ற, குறித்த பணிக்கான சிறந்த நிபுணத்துவத்தைக் கொண்டவர்கள்.

(ஆ) நீர் த்தொழில்நுட்பவியலாளரொருவரென ஏதும் உள்ளூராட்சி மன்றமொன்றினால் வழங்கும் அனுமதிப்பத்திரத்தை கொண்டுள்ளவர்கள்.

(இ) குறிப்பிட்ட நிபுணத்துவ வகை சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி அல்லது தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட நீர்க்குழாய் கைத்தொழில் தொடர்பான சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ளவர்கள்.

(ஈ) நிபுணத்துவ நீர்த்தொழில்நுட்பவியலாளராக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் மூலம் பெற்றுக் கொண்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ளவர்கள்.

(2) நீர்க் கைத்தொழில் தொழில் நுட்ப முகாமைத்துவம் சம்பந்தமான தகைமையுடைய பொறியியலாளர் அல்லது (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள, அனுபவத்தையும் தகைமையையும் கொண்ட ஏதாவது தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் சந்தர்ப்பத்தில், உள்ளூராட்சி நிறுவனமொன்றின் தலைவரால் அத்தனியார் நிறுவனத்தை நீர்க் கைத்தொழில் தொழிநுட்பவியலாளரென பதிவு செய்ய முடியும்.

(3) (அ) இத்துணை விதிகளின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற நீர்க் கைத்தொழில் தொழிநுட்பவியலாளர்களின் பட்டியலொன்று உள்ளூராட்சி நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனத்தால் இந்த பதிவு பட்டியலின் நகல் ஒன்று அல்லது இந்த பட்டியலுக்கு பின்னர் செய்யப்படும் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் உடனடியாக உரிய ச. அ. அ. விடம் அனுப்பப்பட வேண்டும்.

6. (1) (அ) நடைமுறையில் உள்ள நீர் வழங்கல் முறையொன்றை விரிவுபடுத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு முன்னர் ச. அ. அமைப்பு நீர் தொழில்நுட்பவியலாளர் மூலம் அதுபற்றி உண்மை நிலை அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதோடு அக்குறிப்பிட்ட அறிக்கை சம்பந்தமாக உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரால் உள்ளூராட்சி மன்றத்தின் தொழில் நுட்ப சேவைகள் குழுவின் அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப சேவைகள் குழு அதற்கான அனுமதியினை வழங்குவதை நிராகரிப்பதாயின் அதற்கான காரணங்களை காட்டவேண்டும்.

(இ) இவ்வாறான கோரிக்கை ஒன்று கிடைத்து 14 நாட்களுக்குள் இந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியது நீர்க் கைத்தொழில்நுட்பவியலாளரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(2) தனிப்பட்ட நீர்ச்சேவை இணைப்பொன்றை வழங்கும்போது ச. அ. அமைப்பினால் போதிய அனுபவமுடைய ஒருவரை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்பதுடன் நீர்க்குழாய்கள் பொருத்துதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை காலத்திற்குக் காலம் பரிசோதிப்பதற்காக நீர் தொழில்நுட்பவியலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

7(1) ச. அ. அமைப்பு மற்றும் விண்ணப்பதாரருக்கு இடையில் செய்யப்படும் ஒப்பந்தத்தில் உள்ள தேவைகள் வேறு எந்த ஒரு விடயங்களுக்காகவும் சொந்த நீர்ச்சேவை இணைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளும் நீரை உபயோகப்படுத்தக் கூடாது.

(2) ச.அ.அ. மூலம் முகாமை செய்யப்படும் நீர் வழங்கல்முறை ஒன்றினால் இத்துணை விதிகளுக்கு முரண்பாடான வகையில் எந்தவொரு நபரினாலும் நீர்ச்சேவை இணைப்பொன்றை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் நீரை உபயோகப்படுத்தல் கூடாது.

(3) ஒரு உரிமையாளர் அல்லது வதிவாளர் மூலம் (1) ஆம் பந்தியின் அல்லது (2) ஆம் பந்தியின் சட்டதிட்டங்கள் மீறப்பட்டிருப்பதாக ச.அ.அ. மூலம் தீர்மானிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அந்த ச.அ.அ. மூலம் அக்குறிப்பிட்ட நீர்வழங்கலைத் துண்டிக்க இயலுமாவதோடு துண்டிப்பதற்கான காரணங்களுடன் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு அறிவிக்க வேண்டும்.

8. ஏதும் நீர் வழங்கல் திட்டமொன்றின் நீர்க்குழாய்களைப் பொருத்தும் போது–

(1) ஏதும் குப்பைக் காண்களுக்கோ, சாம்பல் குழிக்கோ, பசளைக் குழிக்கோ, மலசலக்கூடக் குழிக்கோ அல்லது அவ்வாறானதொன்றினூடாகவோ, அல்லது தொடக்கூடியவாறோ அல்லது எந்தவொரு நீர்ச் சேவைக்குழாயும் இடப்படக்கூடாது என்பதுடன், தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களிலன்றி அவ்வாறான குழாயொன்றை ஏதும் அசுத்தமான மண்ணுக்கு இடையேயோ அல்லது அக்குழாய்கள் அசாதாரணமாக துருப்பிடிக்கக் காரணமாகவிருக்கும ஏதும் ஏதேனும் பொருட்களுக்கிடையே இடுதல் அல்லது அவை ஒன்றையொன்று தொடக்கூடியவாறு வைத்தல் ஆகாது.

(2) தவிர்க்க முடியாததொரு விடயம் காரணமாக மேலே (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளைப் பின்பற்றமுடியாத சந்தர்ப்பங்களில் வெளிப்புறமாக துருப்பிடிப்பதை தடுக்கும் குழாயொன்றின் மூலமோ அல்லது வேறு உகந்த உபாயமுறையின் மூலமோ அவ்வாறான பொருட்களுடன் குழாய் ஒன்று சேர்வதை உகந்தவாறு தடுத்துக்கொள்ளல் வேண்டும்.

9. நீர் வழங்கலின்போது பயன்படுத்தப்படும் நீர்க்குழாய்கள் மற்றும் பாகங்கள், இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களுக்கு ஏற்புடையனவாக இருத்தல் வேண்டும்.

10. அவசியம் ஏற்படுகின்ற எந்தச் சந்தர்ப்பத்திலேனும் ச. அ. அ. மூலம் பொதுச் சபைக் கூட்டத்தில் நீர்க்கட்டண முறையினை தீர்மானித்தல் அல்லது மாற்றியமைத்தல் இயலுமென்பதோடு அக்குறிக்கப்பட்ட தீர்மானம் அல்லது மாற்றியமைப்பினை மேற்கொள்ள உள்ளூராட்சி நிறுவனத்தின் பொதுச் சபையின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

11. (1) நீர்த்திட்டத்தினால் ஏதும் இடத்துக்கு வழங்கப்படும் நீரைக் கணிப்பீடு செய்வதற்காக மானியொன்று பயன்படுமாயின் அம்மானியை சமூக அடிப்படையிலான அமைப்பே பொருத்துதல் வேண்டும்.

(2) நீர் மானியின் அனைத்துப் புதுப்பித்தல்களும் சமூக அடிப்படையிலான அமைப்பினால் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்கான செலவுகளை நீரைப் பெற்றுக்கொண்ட உரிமையாளரினாலோ அல்லது குடியிருப்பாளரினாலோ ஏற்கப்படல் வேண்டும்.

(3) மேலே (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நீரைக் கணிப்பீடு செய்ய மானியொன்று பயன்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் அதற்கு சமூக அடிப்படையிலான அமைப்பின் பிரேரணைத் தீர்மானமொன்றின் மூலம் தீர்மானிக்கக்கூடிய கட்டணமுறையை விதிக்க முடியும்.

12. ஏதும் மாதத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் முறையே குறிக்கும் ஆரம்ப மானி வாசிப்புக்கும் இறுதி மானி வாசிப்புக்குமிடையிலான வித்தியாசத்தை கவனத்திற்கொண்டு அம்மாதத்திற்கான நுகர்ச்சியின் அளவு பின்வருமாறு கணிப்பிடப்பட வேண்டும்:-

(1) புதிதாகப் பொருத்தப்பட்ட மானியொன்று தொடர்பில் ஆரம்ப வாசிப்பானது, அம்மானி பொருத்தப்பட்ட சந்தர்ப்பத்தின்கீழ் குறிப்பிடப்பட்ட வாசிப்பாகுமென்பதுடன், அதன் பின்னரான சந்தர்ப்பங்களில் முன்னைய மாதத்துக்கான இறுதிவாசிப்பே ஆரம்ப வாசிப்பாகும். இப்பிரிவின் கருமங்களுக்காக புதிதாகப் பொருத்தப்பட்ட மானி என்பது, பழுதுகள் சீரமைக்கப்பட்ட பின்னர் மீண்டும் பொருத்தப்பட்ட மானி அல்லது மானி பழுதடைந்த காலப்பகுதியில் தற்காலிகமாகப் பொருத்தப்பட்ட மானியென்பதும் கருத்தாகும்.

(2) ஏதும் மாதத்துக்கான இறுதி வாசிப்பு அம்மாதம் முடிவடைந்து 10 நாட்களுக்குப் பிந்தாத ஏதும் நாளில் எடுக்கப்படும் வாசிப்பாகும். அவ்வாறாயினும் புதுப்பித்தலொன்றுக்காக மானி அப்புறப்படுத்தப்படும் போது அக்காலப் பகுதிக்குள் இறுதிவாசிப்பைக் குறித்துக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் இம்மானியை அகற்றிச் செல்ல முன்னர் எடுக்கப்பட்ட வாசிப்பே இறுதி வாசிப்பாகும். இப்பிரிவில் அம்மானியின் இறுதிவாசிப்பு என்பதில், தற்காலிகமாகப் பொருத்தப்பட்ட மானியொன்றை மீண்டும் அகற்றும் சந்தர்ப்பத்தில் செய்யப்படும் வாசிப்பும் உள்ளடங்கும்.

(3) ஏதும் மாதமொன்றுக்குள், ஏதும் நீர்வழங்கல் இடத்தில் இரண்டு அல்லது அதற்கு மேல் அதிகமான மானிகள் பயன்படுத்தப்பட்டிருப்பின், அம்மானிகளில் மேலே (1) மற்றும் (2) உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு மானியிலும் குறிக்கப்பட்டுள்ள நீரின் அளவுகளின் கூட்டுத்தொகை மாதத்துக்குள் நுகரப்பட்ட நீரின் அளவாகும்.

(4) ஏதும் பழுதுகள் சீரமைப்புக்காக மானியொன்றை அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் அதற்குப் பதிலாகத் தற்காலிக மானியொன்றைப் பொருத்துவதற்கு சமூக அடிப்படையிலான அமைப்புக்கு முடியாது போகும் சந்தர்ப்பங்களில், மாதாந்த நீர் பாவனை மதிப்பீடானது முன்னைய மாதங்களின் நீர் பாவனையின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

13. (1) சமூக அடிப்படையிலான அமைப்பினால் இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய தமது நீர் நுகர்வாளர்களுக்கு ஒவ்வொரு மாதமொன்றின் இறுதியிலும் அவர்கள் நுகர்ந்த நீரின்அளவை அடிப்படையாகக் கொண்டு கட்டணப் பட்டியல் தயார் செய்வதும் அதனை நுகர்வு இடத்தினது உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு கையளித்தல் சட்டரீதியானதென்பதுடன் ச.அ.அ. குறிந்துரைக்கும் காலத்தில் கட்டண பட்டியலுக்கு பணத்தை செலுத்துவது உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரது பொறுப்பாகும்.

(2) மேலே (1) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணப் பட்டியலின் ஏதேனும் கணிப்பீடுகள் தவறானதென நீர் நுகர்வாளர் கருதுவாராயின், குறித்த கட்டணப் பட்டியலை திருத்தித் தருமாறு எழுத்துமூலமான கோரிக்கையினை செய்யலாம். அவ்வாறான தொரு கோரிக்கை பெறப்பட்டதன் பின்னர் முடியுமானளவு வீரைவாக சமூக அடிப்படையிலான அமைப்பு அது தொடர்பில் பரிசீலனை செய்து தமது தீர்மானத்தை நீர் நுகர்வாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்.

14. (1)ஏதேனும் இடமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரினால் தமது இடத்துக்குப் பெற்றுள்ள நீர்ச் சேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள மானியின் பிழையின்மை தொடர்பில் வினா எழுதப்பட்டால், குறித்த குடியிருப்பாளரின், கோரிக்கைக்கு ஏற்பவும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் இணக்கத்துடனும், சமூக அடிப்படையிலான அமைப்பினால் விதிக்கப்படும் பரிசோதனைக்கட்டணத்தை குறித்த சமூக அடிப்படையிலான அமைப்புக்கு முன்னாகவே செலுத்துவதன் அடிப்படையில், அக்குடியிருப்பாளரின் அல்லது உரிமையாளரின் முன்னிலையிலோ அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் முன்னிலையிலோ மானியானது 5 ஆம் துணைப் பிரிவில் குறிப்பிடப்படும் நீர் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர் ஒருவரால் பரிசீலக்கப்படுவதற்கு ச.அ.அ நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அப்பரிசோதனையின் பெறுபேறு சமூக அடிப்படையிலான அமைப்பு மற்றும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் ஏற்கப்படவேண்டுமென்பதுடன், குறித்த பரிசோதனையின் பெறுபேற்றுக்கமைய மானி சரிசெய்யப்படல் வேண்டும்.

(2) மானியின் நீர் அளவானது சரியானதாகவோ அல்லது உண்மையில் வழங்கப்பட்ட நீரின் அளவில் 2 % ஐ விஞ்சாதவாறு வித்தியாசப்படும் சந்தர்ப்பமொன்றின் (1) ஆம் பந்தியின் கீழ், செலுத்தப்பட்ட பரிசோதனைக் கட்டணமானது, விண்ணப்பதாரிக்கு மீள் செலுத்தப்படமாட்டாது.

(3) மானியின் நீர் அளவானது, உண்மையில் வழங்கப்பட்ட நீரின் அளவிலும் பார்க்க 2% க்கு அதிகமாக வித்தியாசப்படும் சந்தர்ப்பங்களில் மேலே (1) ஆம் பந்தியின் கீழ் முன்னமே செலுத்தப்பட்ட பரிசோதனைக் கட்டணத்தை விண்ணப்பதாரிக்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

(4) மேலே (3) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மானியில் ஏதேனும் சீரின்மைகள் கண்டுபிடிக்கப்பட்டால் சமூக அடிப்படையிலான அமைப்பினால் குறித்த நுகர்வாளரின் கட்டணப்பட்டியல்கள் உரியவாறு திருத்தியமைக்கப்பட்டு, அவை அடுத்துவரும் கட்டணப்பட்டியல்களில் உகந்தவாறு ஈடுசெய்து கணக்கினை தயாரித்தல் வேண்டும்.

15. நீர் வழங்கல்முறையை மேம்படுத்துவதற்காக மேலதிக நிதி தேவைப்படுமாயின் சமூக அடிப்படையிலான அமைப்பினால் உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து இதற்கான நிதியினை பெற்றுக்கொள்ள முடியும்.

**16. இத்துணைவிதிகள் அமுல்படுத்தப்படும் திகதியின் பின்னர்.-**

(1) ஏதும் இடத்துக்கு வழங்கப்படும் நீரின் பகுதியை தேக்கி வைப்பதற்கு சமூக அடிப்படையிலான அமைப்பினால் தீர்மானிக்கப்படும் ஏதும் கொள்ளளவிலும் பார்க்க அதிகமான கொள்ளளவைக் கொண்ட நீர் தாங்கி அல்லது தேக்கியை அவ்விடத்தில் பொருத்துவதோ நிர்மாணிப்பதோ ஆகாது.

(2) ச.அ. அமைப்பினால் ஏதேனும் இடத்துக்கு வழங்கப்படும் நீரைத் தேக்கிவைப்பதற்காகப் பொருத்துவதற்கு அல்லது நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிகளின், குளியல் தேக்கிகளின் அளவு, வடிவம், எண்ணிக்கை தொடர்பாக சமூக அடிப்படையிலான அமைப்பின் முன் அங்கீகாரம் பெறப்பட்டாலன்றி அவ்வாறான எந்தவொரு நீர்த்தாங்கியையோ அல்லது தேக்கியையோ அவ்விடத்தில் பொருத்தப்படவோ நிர்மாணிக்கப்படவோ ஆகாது.

17. தனிப்பட்ட நீர்ச்சேவை இணைப்பொன்றின் ஒரு பகுதி ஏதும் குழாய் திறப்பினால் குழாயின் மானியினால் அல்லது வேறேதும் பொருத்தல்களினால் நீர் வீண்விரயமாவதை அறியும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமூக அடிப்படையிலான அமைப்பினால் உரிய உரிமையாளருக்கு அல்லது வதியாளர்களுக்கு அதனை திருத்தி அமைத்துக்கொள்ள கட்டளையிட வேண்டும். அதனை மூன்று நாட்களுக்குள் திருத்தி அமைத்துக்கொள்ளாதபோது குறித்த நீர்ச்சேவை இணைப்பை உடனடியாகத் துண்டிக்க முடியுமென்பதுடன் அவ்வாறு வீண்விரயமாவதற்குக் காரணமான தவறை, குறித்த இடத்தின் உரிமையாளரினாலோ அல்லது குடியிருப்பாளரினாலோ சரிசெய்யும்வரை அச்சேவையை மீண்டும் இணைப்புச் செய்யக் கூடாது.

18. ச. அ. அ. மூலம் நிர்வகிக்கப்படுகின்ற நீர்வழங்கல் முறையின் பகுதிகளிலொன்றான ஏதேனும் குழாய் திறப்பில், குழாய், மானி அல்லது வேறு ஏதாவது உபகரணத்தின் வாயிலாக நீர் வீணாகுவதாக குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவருக்கு முறைப்பாடு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அத்தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அதிகாரிக்கு அம்முறைப்பாடு பற்றி விசாரித்து குறித்த ச.அ.அ. இற்கு அல்லது அதற்கு தொடர்புபட்ட வேறு பிரிவினருக்கு தகுந்த கட்டளைகளை விடுத்தல் வேண்டும்.

19. சமூக அடிப்படையிலான அமைப்புகளினால் நீர் வழங்கல் திட்டங்களை நிர்மாணிக்கும் போதும், பராமரிக்கும் போதும், பேணிவரும் போதும், சேவைகளை விஸ்தரிக்கும்போதும் குறித்த நீர்த்திட்டத்தினால் சேவையைப் பெறவேண்டிய ஒவ்வொரு நபரினதும் சமூகத்தினதும், ஆகக்குறைந்த நீர்த்தேவைகளை வழங்குதல் வேண்டும்.

20. (1) இத்துணை விதிகளின் கீழ் நீர் வழங்கப்படும் கட்டிடமொன்றில் அல்லது இடத்தில் வசிப்பவருக்கு அல்லது உரிமையாளருக்கு முறையாக அறிவித்த பின்னர், சமூக அடிப்படையிலான அமைப்பின் தலைவருக்கு அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவருக்கு நீர்க்குழாய்களின், நீர்க்குழாய் பொருத்தல்களின் நிலைமையை பரிசீலிக்கவும், நீர் வீண்விரயமாக்கப்படுகின்றதா அல்லது நீர் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை அறிந்து கொள்ளவும், அக்கட்டிடத்துக்கு அல்லது இடத்துக்கு மு.ப. 7.00 மணி தொடக்கம் பி. ப. 5.00 மணி வரையான காலப்பகுதிக்குள் எந்நேரமும் பிரவேசிக்க முடியும். ஏதேனும் சந்தர்ப்பத்தில் குறித்த இடத்துக்கு பிரவேசிப்பதற்கு சமூக அடிப்படையிலான அமைப்பின் தலைவருக்கு அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்டவருக்கு தகுந்த காரணமின்றி அனுமதி அளிக்கப்படாதபோது அல்லது அவ்வாறான பரிசோதனையைச் செய்வதற்கு தகுந்த காரணமின்றி அவரைத் தடுக்கும்போது அது தொடர்பாக சமூக அடிப்படையிலான அமைப்பினால் உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவருக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

(2) மேலே (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறைப்பாடு கிடைப்பின் உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரால் நிகழ்வு தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், சமூக அமைப்பின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் கட்டிடத்திற்கு அல்லது இடத்திற்கு பிரவேசித்தலை தகாத வகையில் நிராகரிக்கப்பட்டிருப்பதாக காணப்படுமிடத்து உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரால் சமூக அடிப்படையிலான அமைப்பின் தலைவருக்கு, குறித்த இடத்திற்கு அல்லது கட்டிடத்துக்கான நீர்ச்சேவை இணைப்பைத் துண்டிக்க அதிகாரமளிக்கப்பட முடியும்.

(3) (2) ஆம் பந்தியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் அதிருப்தி கொண்ட யாரேனும் நபரொருவர் உரிய மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் அவ்விடயங்களை முன்வைக்கலாம்.

21. (1) ஏதும் உள்ளூராட்சி நிறுவனமொன்றால் எழுத்திலமைந்த ஏதேனும் சட்ட ஒழுங்கு ஏற்பாடுகளுக்கு முரண்படாத வகையில் ஓர் குறித்த திகதியிலிருந்து பிரகடனப்படுத்தப்படும் வகையில் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும் அறிவித்தலொன்றின் மூலம் குறித்த நிலப்பரப்புப் பிரதேசமொன்றை "நீர் உள்ள ஒரு பிரதேசமாக" பிரகடனப்படுத்த முடியும்.

(2) அவ்வாறு பிரகடனப்படுத்தப்படும் திகதி முதல், இந்த நீர் பரப்பு பிரதேசத்துக்குள் மரம் வெட்டுதல், காடழித்தல், அசுத்தப்படுத்துதல், எந்தவொரு மிருகத்தையேனும் மேயவிடுதல், குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் முறையான அனுமதியின்றி குறித்த பிரதேசத்துக்குள் பிரவேசித்தல் மற்றும் குறித்த பிரதேசத்தின் நீர் வரத்துக்கு பாதிப்பேற்படும் வகையில் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையையும், எவரும் மேற்கொள்ளல் கூடாது.

(3) நீர் வழங்கல் திட்டத்தின் பிரதான நீர் வரத்துக்கு அல்லது நீர்த்தாங்கிக்கு, பிரதான நீர்க்குழாய்களில் அல்லது ஏனைய துணைக்குழாய்களில், நீர் வழங்கல் திட்டத்துக்கு உரித்தான எந்தவொரு கட்டிடங்களுக்கு அல்லது நிர்மாணிப்புகளுக்கு அல்லது உபகரணங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் யாரேனும் மேற்கொள்ளலாகாது.

(4) நீர் வழங்கல் மற்றும் நீர்க்கைத்தொழில் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு அல்லது கொண்டு நடாத்துவதற்கு சட்ட ரீதியான காரணமின்றி எவரேனும் தடைகளை ஏற்படுத்தலாகாது.

22. "ச.அ.அ." னால் பராமரிக்கப்படும் நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நீரின் தரத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக பயன்படுத்தப்படும் நீர்வரத்து பிரதேசங்கள் மற்றும் நீரேந்து பகுதிகளின் சுத்தம், முறையான பேணுகை மற்றும் பாதுகாப்பினை உள்ளூராட்சி நிறுவனம்,பிரதேசத்தின் சமூக அமைப்பு மற்றும் உரிய ச.அ.அ. என்பன ஒழுங்காக மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், இதற்காக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் அல்லது வேறு உரிய அதிகார சபையால் விதிக்கப்படும் நியமங்களுக்கும் ஏற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

23.(1) (அ) இத்துணை விதிகள் செயற்படுத்தப்படுவது தொடர்பாக எழும் ஏதேனும் பிணக்குள் இருப்பின் முதலில் சமத்துவத்தின் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு முன்வைக்கப்பட வேண்டும்.

(ஆ) ஏதேனும் பிணக்குகள் ஏற்பட்டு அடுத்து வரும் 30 நாட்களுக்குள் அப்பிணக்குகள் தீர்வுக்காக சமர்ப்பிக்கப்பட கூடிய தாகவிருத்தல் வேண்டும்.

(2) (1) ஆம் பந்தியின் விடயத்துக்கான "பிணக்குகள்" என்பது ச.அ.அ. பதிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனம் மற்றும் ச.அ.அ. இடையில் அல்லது ச.அ.அ. மற்றும் வேறு அண்மித்த உள்ளூராட்சி நிறுவனமொன்று அல்லது இரண்டு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையில் அல்லது இரண்டு ச.அ. அமைப்புக்கு இடையில் அல்லது ச.அ.அ. மற்றும் நுகர்வோர் ஒருவருக்கு இடையில் ஏற்படக்கூடிய பிணக்குகள் ஆகும்.

(3) (1) ஆம் மற்றும் (2) ஆம் பந்திகளில் குறிப்பிடப்படும் பிணக்கொன்றினை சமத்துவத்தின் மூலம் தீர்த்து வைப்பதற்காக, சமத்துவராக பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இருக்க வேண்டும் என்பதுடன் இப்பிணக்கினை சமத்துவரிடம் முன்வைப்பது இரு கட்சிதாரர்களின் ஒருவருடைய பணியாகும்.

(4) பிணக்கின் தன்மைக்கு ஏற்ப, பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் சமத்துவராக வேறு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க முடியும்.

(5) சமத்துவரின் தீர்மானங்கள் தொடர்பில் அதிருப்தியுறும் ஒருவருக்கு அத்தீர்வுக்கு பின்னர் அடுத்துவரும் 30 நாட்களுக்குள் அத்தீர்வுக்கு எதிராக அம்மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளருக்கு மேன்முறையீடொன்றை சமர்ப்பிக்க முடியும்.

24. இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஏற்பாடுகள் மீறப்படல் யாரேனும் பிரிவினரால் செய்யப்படும் குற்றமாகுமென்பதுடன், குறித்த தவறு தொடர்பாக, மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர், ரூபா எழுநூற்று ஐம்பதை விஞ்சாத தண்டப்பணத்திற்கு உட்படுதல் வேண்டும். குறித்த மீறலைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அல்லது குறித்த மீறுதல் தொடர்பான கவனத்தைக் கோரும் எழுத்து மூலமான அறிவித்தலை உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரால் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டதன் பின்னர், குறித்த தவறைத் தொடர்ந்தும் செய்துவரும் ஒவ்வொரு நாளுக்காகவும் ரூபா இருநூற்றைம்பதை விஞ்சாத மேலதிக தண்டப்பணத்திற்கும் உரியவர் உட்படல் வேண்டும்.

25. இத்துணை விதிகளின் கருமங்களுக்காக:

"உரிமையாளர் அல்லது குடியிருப்பவர்" மற்றும் இத்துணை விதிகளின் கீழ் செயற்படுகின்ற நீர் வழங்கல் திட்டமொன்றினால் நீர்வழங்கல் இணைப்பொன்றைப் பெற்றுள்ள இடமொன்றின் சட்டரீதியான உரிமையாளர் அல்லது வதிவாளர் அல்லது அவ்விடத்தினை பயன்பாட்டிற்கொள்ளும் யாராயினும்மொருவரென பொருள்படும்.

"நீர் உள்ள பரப்பு" என்பதனால் இத்துணை விதிகளின் ஏற்பாடுகளின் கீழ் தற்பணிகளுக்காக யாரேனும் நபரொருவரால் அல்லது சபையொன்றால் அடையாளம் காணப்பட்ட நீர் வரத்துக்கு பெறப்படும் நீர் வழங்கலை அபிவிருத்தி செய்வதற்கு தகுந்த பூகோள பிரதேசமாக உரிய உள்ளூராட்சி நிறுவனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அல்லது நீர் வரத்து பகுதிக்கு நீர் வழங்கும் பிரதேசமாக தீர்மானிக்கக்கூடிய அல்லது பிரதேசத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்படுவதன் மூலம் நீர் வரத்து பிரதேசததின் நீர் வழங்கலில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிரதேசமாக கவனத்திற் கொள்ளக்கூடிய பூகோள பிரதேசமென பொருள்படும்.

"நீர் வழங்கல் மற்றும் நீர் கைத்தொழில்" என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, உள்ளூராட்சி சட்டத்தின் 126 ஆம் பிரிவின் (xiii) ஆம் பந்தியில் அதற்காக வழங்கப்பட்டுள்ள அர்த்தமென பொருள்படும்.

"தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை" என்பது 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என பொருள்படும்.

"மாகாண நீர் பற்றிய குழு" என்பது ஊவா மாகாணத்தின் நீர் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அல்லது அவ் அமைச்சின் செயலாளருடைய அல்லது ஊவா மாகாணத்தின் முதன்மை செயலாளருடைய தலைமையில் நடாத்தப்படும் ஊவா மாகாண நீர் குழு என பொருள்படும்.

"மாகாண உள்ளூராட்சி நிறுவனங்கள்" என்பது மா நகர சபைகள் அல்லது நகர சபைகள் அல்லது பிரதேச சபைகள் என பொருள்படும்.

"மாகாண உள்ளூராட்சி மன்ற தலைவர்கள்" என்பது மாநகர சபைகள் தொடர்பாக நகர முதல்வர், நகர சபைகள் அல்லது பிரதேச சபைகள் தொடர்பில் அவற்றின் தலைவர்கள் எனப் பொருள்படும்.

"தனிப்பட்ட நீர்ச்சேவைகள்" என்பதற்கு விற்பனைக்காக அல்லது வாடகைக்கு விடுவதற்காக குதிரைகளையோ அல்லது மாடுகளையோ அல்லது வாகனங்களையோ வைத்திருக்கும்போது அக்குதிரைகளை, மாடுகளை, வாகனங்களை கழுவுவதற்கான நீர் அல்லது நீர் பூ அல்லது நீச்சல் தடாகத்துக்கு அல்லது அலங்கரிப்புக்கு அல்லது இயந்திரப் பணிகளுக்கு அல்லது நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு அல்லது விவசாய தேவைகளுக்கு அல்லது நீரை பிரதான மூலப்பொருளாக பயன்படுத்தும் ஏதேனும் கைத்தொழிலொன்றுக்கு அல்லது வியாபாரமொன்றுக்கு தேவையான நீர் அல்லது குடிநீர் மற்றும் வீட்டு நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு கருமங்களுக்கு தேவைப்படும் நீர் இதனில் உள்ளடங்காது.

"சமூக அடிப்படையிலான அமைப்பு" என்பது நீர் வழங்கல் மற்றும் நீர் கைத்தொழில் சேவையினை வழங்கும் கருமங்களுக்காகவும், அவற்றின் நிலையான முகாமைத்துவத்திற்காகவும் ஏற்படுத்தப்பட்டதும் மற்றும் குறித்த சட்டத்தின் கீழ் ஒழுங்கான முறையில் பதிவு செய்யப்பட்டு கூட்டிணைக்கப்பட்டதும், நுகர்வோர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பென பொருள்படும்.

"சமூக அடிப்படையிலான ஒன்றியம்" என்பது உள்ளூராட்சி நிறுவன அதிகார எல்லைக்குள் தாபித்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு ச.அ. அமைப்பின் பிரதிநிதிகள் அடங்கலான கூட்டினைவென பொருள்படும்.

## முதலாம் அட்டவணை

3ஆம் துணை விதி

நீர் வழங்கல் திட்டமொன்றை முகாமைத்துவம் செய்யும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

I. சகல ச.அ.அ. மூலம் அறவிடப்படும் பணம் தொடர்பாக பற்றுச்சீட்டொன்றை வழங்க வேண்டுமென்பதுடன் இக்கருமங்களுக்காக 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைக் கட்டணச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாய் செயல்படல் வேண்டும்.

II. நூறு ரூபாவுக்கு அதிகமான சகல செலுத்தல்களும் உறுதிச்சீட்டுக்கள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

III. பொது பேரேடு, வரவுகள் மற்றும் செலுத்தல்களைக் குறிக்கும் காசுப் புத்தகம், சில்லறைக் காசுப்புத்தகம் மற்றும் பொருட்கள் பற்றிய பதிவேடு என்பவற்றை சகல ச.அ. அமைப்புக்களும் பராமரித்தல் வேண்டும்.

IV. (அ) ச.அ.அ. வின் சகல கணக்குகளும் சுதந்திர கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வு நிறுவகமொன்றின்மூலம் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன் கணக்காய்வறிக்கையானது பிரதேசத்தின் சமூக அடிப்படையிலான ஒன்றியத்துக்கும், குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் மற்றும் ச.அ.அ. நிறைவேற்றுக் குழுக்கூட்டத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவர் தேவையென கருதும் எச்சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனத்தின் ஒரு அதிகாரியின் மூலம் ச.அ.அ. இன் கிராமிய நீர்வழங்கல் முறைக்கான அனைத்து கணக்குகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை பரிசீலித்து ச.அ.அ. இற்கு பொருத்தமான கட்டளைகளை விடுக்கலாம்.

V. ச.அ.அ. நடைமுறை வங்கிக்கணக்கொன்றை பயன்படுத்த வேண்டும் என்பதுடன் அக்கணக்கின் மாதாந்த கணக்கிணக்கக்கூற்று அடுத்த மாதம் 15 ஆந் திகதிக்கு தயாரிக்கப்பட வேண்டும்.

VI. நீர் நுகர்வோர்களின் அட்டவணையொன்றைப் பராமரித்தல் வேண்டும்.

VII. ச. அ. அ. மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள நீர்ச்சேவை வழங்குவதற்கான நியமங்கள் பூர்த்தி செய்யப்படும் படிமுறைகளுக்கு ஏற்ப நீர்ச்சேவை வழங்கப்பட வேண்டும்.

VIII. நீர் வழங்கல் முறைமையினை முகாமை செய்யும் ச.அ.அ. மூலம் மாதாந்த முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். மேலும் 'ச. அ. அமைப்பு', 'ச. அ. அமைப்பின்' கிராமிய நீர் வழங்கல் முறைக்கான அனைத்து கணக்குகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றை மூன்று மாதத்திற்கொருமுறை குறித்த உள்ளூராாட்சி நிறுவனத்தின் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

IX. *14 (1) ஆம் துணை விதிகளின் ஏற்பாடுகள் மூலம் செய்யப்பட்டுள்ள பரிசோதனைக் கட்டணம், அவ்வாறான பரிசோதனைக்கான உண்மையான செலவுகளாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அது குறைவருமானம் பெறுவோரொருவரும் செலுத்தக்கூடிய நியாயமான கட்டணமாக இருத்தல் வேண்டும்.*

X. *நீர் வழங்கல் திட்டத்திற்காக ச.அ.அ. கொள்வனவு செய்துள்ள மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்தால் அல்லது வேறு ஏதும் அமைப்பொன்றினால் கொடையாக அல்லது கடனாக வழங்கப்பட்டுள்ள–*

(அ) *சகல நிலையான சொத்துக்களுக்கான, நிலையான சொத்துக்கள் பற்றிய அட்டவணையொன்றும்,*

(ஆ) *சகல மூலதனச் சொத்துக்களுக்கான, பொருட்கள் பதிவேடொன்றும், அந்த பதிவேடு ச.அ.அ. னால் காலத்திற்கு காலம் பூரணப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட வேண்டுமென்பதுடன், இந்த உப அட்டவணையின் 4 ஆம் பந்தியில் குறிப்பிப்பட்டுள்ள கணக்காய்வுக்கு முன்னர் வருடாந்தம் செவ்வை பார்க்கப்பட்ட பின்னர் உண்மைநிலை அறிக்கையொன்றை தயாரித்தல் வேண்டும்.*

XI. *மாகாண நீர் குழு அல்லது தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையால் கோரப்படும் சந்தர்ப்பங்களில் "ச. அ. அ." வினால் "ச.அ.அ." வின் நீர் வழங்கல் முறைகளுக்கு உரிய நிதி மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பான தகவல்களை எழுத்து மூலமான அல்லது வாய்மொழிமூலமான கோரிக்கைக்கு ஏற்ப மாகாண நீர் குழு அல்லது நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு பெற்றுக்கொடுக்க வேண்டியதுடன், அந்நீர் வழங்கல் முறைகளுக்கு உரிய தகவல்கள், பதிவேடுகள், ஆவணங்கள், அறிக்கைகள், நீர் வழங்கல் முறைகள் அல்லது பொருட்களஞ்சியங்கள் அல்லது வேறு ஏதேனும் ஒரு இடத்தை பரிசோதிப்பதற்கோ சந்தர்ப்பம் கோரினால் அதற்கு இடமளித்தல் வேண்டும்.*

**இரண்டாம் அட்டவணை**

*9 ஆம் துணை விதி*

*நீர் வழங்கல் திட்டத்தில் பயன்படுத்தப்படும் நீர்க்குழாய்கள் மற்றும் பாகங்கள்*

(i) *சகல "பொலி வைனயில் க்லோரயிட்" (பீ.வீ.சீ) நீர்க்குழாய்கள் இலங்கை தரம் இலக்கம் 147:1993 இற்கு அல்லது காலத்திற்குக் காலம் செய்யப்படுகின்ற திருத்தங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். இலங்கையில் தயாரிக்கப்படும் நீர்க்குழாய்களில்* SLS *சின்னம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். "பொலி வைனயில் க்லோரயிட்" (பீ.வீ.சீ.) நீர்க்குழாய்களின் பொருத்துதல் இலங்கையின் தரம் 659: 1993 இற்கு அல்லது பிரித்தானிய தரம் 4346:1970 இல்* I *மற்றும்* II *ஆம் பிரிவிற்கு மற்றும் அதற்கு காலத்திற்கு காலம் செய்யப்படுகின்ற திருத்தங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.*

(ii) *நீர்ச்சேவை இணைப்பொன்றை நிர்மாணிப்பதற்காக உபயோகிக்கப்படும் சகல "பொலி எதின்" நீர்க்குழாய்களும் 6572:1985 வுடைய பிரித்தானிய தரத்திற்கு மற்றும் அதற்கு காலத்திற்கு காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கு அல்லது வேறு தேசிய தரத்திற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். நிலத்தின் மேலாக உபயோகிக்கப்படுத்தப்படும் நீர்க்குழாய்கள் 6730:1986 வுடைய பிரித்தானிய தரத்திற்கு மற்றும் அதற்கு காலத்திற்குக் காலம் செய்யப்படுகின்ற திருத்தங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.*

(iii) *நீர்ச்சேவை இணைப்பொன்றை நிர்மாணிப்பதற்கு உபயோகப்படுத்தப்படும் சகல "கெல்வனைஸ் சித்த உலோகம்" நீர்க்குழாய்கள் 1387:1985 வுடைய பிரித்தானிய தரத்திற்கு மற்றும் அதற்கு காலத்திற்குக் காலம் செய்யப்படுகின்ற திருத்தங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.*

*02-241*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.